

SRI RAJARAJESWARAI AMBAL SAMEDA
SRI RAMALINGAM SWAMI DESVASTHANAM

# MANAVARI SHIVAN KOVIL

www.manavariramalingeswaram.lk
TP- 0777 97 93 67

Reg No-: HA/6Put/24

## புராதனம்மிக்க சிலாபம் மானாவரி இராமலிங்கேஸ்வரம்

### அறிமுகம்

இராமயணம் உலக வரலாற்றில் ஆகப்பழமை வாய்ந்த எழுத்து வடிவம் பெற்ற ஒரு மனிதர்களின் வரலாறாகும். இற்றைக்கு 8500 வருடங்களுக்கு முற்பட்டதாக இந்த நாகரீகம் காணப்படுகின்றது. உலகின் தொன்மையான நாகரீகம் இந்தியாவில் இருந்து தொடங்குகின்றது. இந்தியத் துணைக்கண்டத்தின் புவிசார் சூழல் அமைவில் இந்திய நாகரீகத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது. இந்திய நாகரீகம் என்பது ஆரியப் பண்பாடு, திராவிடப்பண்பாடு என்ற இரண்டு பிரதான பண்பாடுகளைக் கொண்டதாகும். இதில் ஆரியப் பண்பாட்டு வகைக்குள் வருவதுதான் இராமநாகரீகம் ஆகும். இந்தியத் துணைக்கண்டப்பகுதியில் இராமயணப்பண்பாடு என்பது மிகத்தொன்மையான ஒரு பண்பாடாக இருந்திருக்கின்றது.

### இராமநாகரீகத்தின் தொடர்ச்சி

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள பண்பாட்டு மற்றும் புவிசார் தொடர்புகளில் ஆரியப்பண்பாடும், திராவிடப்பண்பாடும் ஈழம்வரை வியாபித்திருக்கின்றது. இராமாயணத்தொடர்ச்சி ஈழத்தில் நிகழ்ந்ததற்கான காவிய ஆதாரங்களின் அடிப்படையில் ஈழம் இராநாகரீகத்தோடும் தொடர்பு படுகின்றது. அயோத்தியை ஆண்ட இராமன் ஈழம் வரை வந்து சீதையை மீட்ட நீண்ட வரலாற்றுத் தொடர்பு இராமயண காலத்துடன் ஈழத்திற்கு இருந்திருக்கின்றது. இந்தியாவில் இருந்து புறப்பட்ட இராமபிரான் ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் தனது பாதச்சுவடுகளை பதித்தமைக்கான புராதன வரலாற்றுச் செய்திகள் பல இன்றும் காணப்படுகின்றன. அந்த வரலாற்றுச் சுவடுகளில் ஒன்றாக காணப்படுவதுதான் சிலாபம் மானாவரி இராமலிங்கேஸ்வரம் ஆகும்.

இலங்கையில் உள்ள சிவாலயங்கள் புராண இதிகாஷ வரலாற்றோடு தொடர்புடையவை. இங்குள்ள சிவாலயங்களை மூன்றுவகையாக வகுக்கப்படுகின்றது. இவற்றில் மூன்றாவது வகையில் அமைந்த ஆலயமாக இந்த ஆலயம் விளங்குகின்றது. சிலாபம் நகரிற்கு வடக்காக சில மைல் தொலைவில் சிலாபம் - புத்தளம் வீதியில் அமைந்துள்ளது. இந்த ஆலயம் இலங்கை அரசனும் சிறந்த சிவபக்தனுமாகிய இராவணனைக் இராமன் சம்ஹாரம் செய்ததனால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீக்குவதன் பொருட்டு இராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தலம் எனும் பெருமைக்குரியது. 'உலகின்கண் புகழ்பெற்று விளங்குகின்ற இலங்கையின் பெருமைகளை எடுத்து விளக்கிக்கூறும் வடமொழிக் காந்தபுராணத்தில் உள்ள தட்ஷிண கைலாய மான்மியம் எனும் இந்நூலேயாகும்.' பதினெண்புராணங்களில் ஒன்றாகிய காந்தத்தில் உள்ள தட்ஷிண கைலாய புராணத்து உத்தரகாண்டப் பகுதியின் பதினேழாவது அத்தியாயம்(இராமன் பிம்மகத்தி நீங்கிய படலம்) இதுபற்றி விளக்கிக் கூறுகின்றது.

> 'முனிவர்களே! கவனத்தோடு கேளுங்கள் முன் சுருக்கமாகச் சொல்லிய சரிதத்தை இப்பொழுது விரிவாய்க் கூறுகின்றோம். இராமச்சந்திரன் அரக்கனாகிய இராவணனை போர் செய்து கொன்று அவன் தம்பியாகிய விபீஷணனுக்கு அரசுரிமையைக் கொடுத்துத் தான் விபீஷணனோடும் இலக்குவணன் சீதாப்பிராட்டி முதலானவர்களோடும்






www.manavariramalingeswaram.lk
TP- 0777 97 93 67



Reg No-: HA/6Put/24


> வானரசேனைகளோடும் ஏறிக்கொண்டு தன் அயோத்தி நகரை நோக்கிப் புறப்பட்டு வரும்போது பிரம்மகத்தியும் விடாமல் பின்தொடர்ந்து வந்தது. பிரமசாயை கருநிறமுடையதாய்க் கையில் தண்ட மேந்திக் கொண்டு விகார முகத்துடன் இராமபிரானை விடாது பின்பற்றி வருத்தியது. இராமன் முனீசுவர தலத்தை யடைதலும் பிரம்மகத்தி விலகிவிட்டது. அது கண்டு இராமபிரான் இது என்ன விந்தை! என்று அசியங்கொண்டு அவ்விடத்தைக் கவனித்த போது அங்கே நந்தவனங்களும் பூஞ்சோலைகளும் சிவதலமும் இருக்கக் கண்டு, விமானத்திலிருந்து பூமியிலிறங்கி முனீசுவரத்தை அடைந்து தீர்த்தத்தில் தோய்ந்து முன்ன நாதரைப் பூசித்து வணங்கித் துதித்தலும் அப்பெருமான் வடிவழகியம்பாளோடு இடபவாகனத்தின் மேல் தோன்றிக் காட்சி கொடுத்தார்.'

என இராவணன் இறப்பின் பின்னர் நடத்த நிகழ்வு காட்சிருபமாக விளக்கப்பட்டுள்ளது. இராவண வதத்தினைத் தொடர்ந்து இராமன் புஷ்பக விமானத்தில் ஏறி அயோத்திக்குச் செல்லும் வழியில் இராமனை பிரம்மகத்தி தோஷம் பின்தொடர்ந்தது. முன்னேஸ்வர ஆலயச் சூழலி அது பின்தொடராமையினை கண்டுவியந்த இராமன் முன்னேஸ்வர் ஆலயம் இருப்பதை கண்டு அங்கு வழிபாடு நிகழ்த்தி இந்த தோஷத்தில் இருந்து தனக்கு விமோசனம் தருமாறு சிவனிடம் வேண்டிய போது சிவபெருமானால் இராமனுக்கு அறிவுறுத்தப்பட்டதாக மானாவரி எனும் இடத்தில் லிங்கத்தினை பிரதிஷ்டை செய்தால் உத்தமம் என்று குறிக்கப்பட்டதாகவும். அவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னர் இராமனுக்கு ஏற்பட்டிருந்த பிரமகத்திதோஷம் நீங்கியதாகவும் தட்ஷிணகைலாயபுராணம் பின்வருமாறு ஆதாரப்படுத்தி இருக்கின்றது.

> 'ஈசுவரன் இராமனுக்கு அருளிச் செய்வது - இவ்விதமாய் இராமன் ஈசுவரனை நோக்கிப் பிரார்த்தனை செய்து நிற்கும்போது அவனுக்கு சிவபிரான் அருளிச்செய்கிறார் :- இராசேந்திரனாகிய இராமனே! நீ கேள், பிரம்மகத்தியினாலே . விடுபடுவதற்குப் பிராயச்சித்த விதியால் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வாய். சேதுமத்தியிருக்குஞ் ஈழ தேசத்திலே சிவதலங்கள் பல உள்ளன. அவற்றுள் மூன்று தலங்கள் விசேடமானவை. அவை மகாபாவங்களை நீங்குவனவாம். அம்மூன்றும் எவையெனில் - முனீசுவரமெனவுங் கோணேசுவரமெனவுங் கேதீசுவரமெனவுமுணர்க. இம்மூன்று தலங்களிலும் மூன்று லிங்கங்களைச் செய்து இராமநாதன் எனும் பெயரினால் விதிப்படி பிரதிட்டை முடிந்து பத்தியினாலே சோடசோபாசாரங்களோடும் பூசை செய்யக் கடவாய். அவ்விதம் செய்வாயேல், உன்னுடைய பாவங்கள் யாவும் முற்றும் நீங்கிவிடும். என்று சிவபிரான் அருளிச் செய்தார். அதற்கு இராமன் பிரபுவே! எந்தத் தானத்தில் மகாலிங்கம் பிரதிஷ்டை செய்வது? அருளிச் செய்தல் வேண்டும் என்றான். இதன் வடதிசையிலுள்ளதும் கங்கையினால் விளங்குவதும் ஆகிய மானாவரி எனும் புண்ணிய பூமியில் சிவலிங்கந் தாபிப்பது உத்தமம் என்று பரமசிவன் அருளிச்செய்து லிங்கத்திலே மறைந்தருளினார்.'

என மானாவரியில் இராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தின் தொன்மை வரலாறு மேற்குறிப்பிட்ட தட்சிஷகைலாய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் இராமேஸ்வரம் எனும் ஆலயமும் ஈழத்தில் சிலாபத்தில் அமைந்துள்ள மானாவரி இராமலிங்கேஸ்வரர் ஆலயமும் இராமனது பெயரால் அமைந்த ஆலயங்களாகும். இந்தியாவில்

இருந்து புறப்படுகின்ற இராமாயண பாதை இலங்கையின் பல்வேறு பகுதிகள் ஊடாக செல்கின்றது.. இவ்வாறு இலங்கையில் இராமனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு இராமபிரானுக்கு பிரம்மதோஷம் முற்றாக நீக்கிய தலமாக மானாவரி இராமலிங்கேஸ்வரர் ஆலயம் காணப்படுகின்றது.

இவ்வாலயத்தின் வரலாறும் இதன் பெருமைகளும் இவ்வாலயத்தின் ஆரம்பவரலாறு எழுதிய ஆசிரியர் அவர்களால் பின்வருமாறு சான்றாதாரங்களோடு கூறப்படுகின்றது.

> 'இம்மானாவரி ஆலயம் இராமனோடு தொடர்புடைய இராமாயணத்தோடு தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது. 'மைசூர் மகாராஜா அவர்கள் சமூகத்தில் பல சரித்திர சோதிஷ வித்வான்கன் முன் ஸ்ரீ தம்பையா சாஸ்திரிகளால் கலி 5026 இல் நிர்ணயம் செய்து பிரசுரமான கன்னட பாஷையத்திலுள்ள "ஸ்ரீ ராம ஜனன நிச்சயம்" எனும் நூலில் குறிப்பிடப்பட்டிருந்த விபரங்களின் படி 1301047 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்பது ஸ்திர சம்பந்தமாக உள்ளது. இந்திய இலக்கிய வரலாற்று அடிப்படையில் வால்மீகியின் இராமாயணத்தின் தொகுப்புக் காலம் கி.மு. 4 அல்லது 3 ம் நூற்றாண்டு எனக் கருதுகின்றனர். ஸ்ரீ இராமனால் இராவண சம்ஹாரத்தால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்குதலின் பொருட்டு சிவலிங்க பிரதிஷ்டை செய்யப்பட்ட தலங்கள் நான்கு. அவற்றுள் **முதலில் பிரதிஷ்டை செய்தது இம் மானாவரியாக இருக்க நான்காவதாக பிரதிஷ்டை செய்தது இந்தியாவின் தென்கரையில் விளங்கும் இராமேஸ்வரத்திலாகும்.** இவ்விரு தலங்களும் இராமநாதன், இராமலிங்கம் எனும் பெயரையுடைய லிங்கங்களோடு காணப்படுகின்றன. மானாவரியில் சுவர்ணலிங்கமும் பின்னர் நான்காவதாக இராமேஸ்வரத்தில் சித்தலிங்கமும் (மண்ணாலானலிங்கம்) பிரதிஷ்டை செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு தலங்களுமே பித்குதர்ப்பணங்கள் செய்வதற்குகந்த சிவஸ்தலங்களாகும்.'

என்ற வரலாற்றுத் தகவல்களில் இருந்து இந்த ஆலயத்தின் பெருமைகள் மென்மேலும் விளங்குவதோடு இது இராமேஸ்வரத்திற்கு முந்தையா ஆலயம் என்ற தொன்மையினையும் கொண்டு விளங்குகின்றது. இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அவருக்கு பாவம், தோஷம் நீக்கிய பெருமையும் இந்த ஆலயத்திற்கு உண்டு. எனவே பாவம், தோஷங்களோடு இந்த ஆலயத்திற்கு வருபவர்களுக்கு அவர்களது தோஷம் நீங்கும் என்பது திண்ணமாகிறது. மேலும் இம்மானாவரி ஆலயத்தினை வழிபட்டால் என்னென்ன பலன்களை அடையலாம் என்பதையும் மேற்குறித்த வரலாற்றினை உரைத்த ஆசிரியர் பின்வரும் சான்றாதாரங்களை ஸ்ரீ சூதமுனிவர் வாக்கில் இருந்து எடுத்துக் காட்டுகின்றார்.

> 'முனிவர்களே! கேண்மின், எல்லாவுலகங்களுக்கும் நன்மை செய்யும் பொருட்டு சுபமாகிய மாயாநதிக்கரையில் இராமநாதர் எனும் பெயருடைய சிவலிங்கம் இப்பொழுதும் இருக்கிறது. மாயாநதி தீர்த்தத்தில் விதிப்படி ஆடிப் பிதிரர்களுக்குத் தருப்பணஞ் செய்து தசதானங்களும் வழங்கி இராமலிங்கத்தை வணங்குபவன் சாயுச்சியப் பேறு அடைவான் என்பது சத்தியம்.'

'ஒரு மனிதன் தன்வாழ்நாளுள் இராமலிங்கத்தை நினைப்பானாயின் அவனுடைய பாவங்களெல்லாம் தொலையப்பெற்று அவன் சிவலோகத்தில் மகிமை பெறுவான். இப்படலம் பரிசுத்தமும் பாவங்களைப் போக்குவதும் கலிதோஷங்களை நீக்கி சுபந்தருவதுமாகும். இதனை ஒருமுறை கேட்டால் இவ்வுலகில் சர்வ சங்கடங்களும் நீங்கிச் சுகமாய் வாழ்ந்து சரீர முடிவில் மோட்சம் அடையலாம். மாயா தீர்த்தத்தில் மூழ்கி இராமபிரான் தாபித்த இராமலிங்கத்தை வணங்குவோன் மனத்தில் நினைத்த போகங்களை எல்லாம் அநுபவித்து முத்தியையும் அடைவான்.'

என தட்ஷிண கைலாயத்தில் கூறுகின்றார்.

இவ்வாறான சிறப்புக்கள் கொண்ட இந்த ஆலயம் பல நூற்றாண்டுகளாக வெளி உலகுக்கு தெரியாமல் இருந்திருக்கின்றது. இந்த ஆலயம்பற்றிய வரலாற்று ரீதியான தகவல்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. புராதன ஆலயம் என பட்டியலிடப்பட்ட வகையில் சி.எஸ்.நவரத்தினம் என்பவரது நூலில் தெதுறு ஓயாவிற்கு வடக்கேயுள்ள வீழும் நிலையிலுள்ள சிவன் கோவில் என சுட்டப்படுகிறது.

இத்தகவல்களின் அடிப்படையில் நீண்டகாலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த இவ்வாலயம் எண்பதுகளில் வளர்ச்சி நிலையைக் காண்கிறது. அதனைத் தொடர்ந்து 28.06.1999 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அதன் பின்னர் இந்த ஆலயம் ஒரு சிலரால் பராமரிக்கப்பட்டு வந்தது. மூர்த்தி தலம் தீர்தம் கொண்டடிருக்கும் இந்த ஆலயம் இன்று கொயேற்றத்துடன் தேர் ஓடும் ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது.